# பாசம் நீரே என் நேசம் நீரே

பாசம் நீரே என் நேசம் நீரே
சொந்தம் நீரே என் பந்தம் நீரே

எனக்காக மரித்தவரே
எனக்காக உயிர்த்தவரே
எனக்காக வந்தவரே
எனக்காக வருபவரே

உமக்கெதிராய் பல கோடி பாவம் செய்தேன்
உம் அளவில்லா அன்பை நான் அசட்டை செய்தேன்
ஆனாலும் நீர் என்னை அன்பு செய்தீர்
என் பாவத்திற்காய் நீர் பலியாகினீர்

எனக்காக முல்முடி ஏற்றுக்கொண்டீர்
எனக்காக சிலுவையில் ஜீவன் தந்தீர்
உமதன்புக்கு முடிவில்லையே
உம்மை தேடினால் அழிவில்லையே

இன்றென்னை முழுமையாய் ஒப்புத்தந்தேன்
உம்க்காய் நான் கனிதரவே உறுமாற்றுமே
என் நேசர் பரிசுத்தரே
புதிதாக்குமே என்னை புதிதாக்குமே